ஸ்ரீ

பகவத்கீதாசாரக் கலிவெண்பா

பகவான்
ஸ்ரீ ரமண மஹர்ஷிகள்
அருளியது

ஸ்ரீ ரமணாஶ்ரமம்,
திருவண்ணாமலை.

Printed at
The Liberty Press,
Madras.

ஸ்ரீ

பகவத்கீதாசாரக்
கலிவெண்பா

பகவான்

ஸ்ரீ ரமண மஹர்ஷிகள்

அருளியது

பிரசுரகர்த்தா

ஸ்ரீ நிரஞ்ஜனானந்த சுவாமிகள்

ஸர்வாதிகாரி

ஸ்ரீ ரமணாஸ்ரமம்,

திருவண்ணாமலை.

விலை] 1940 [அணா ஒன்று

முகவுரை

நினைக்க முக்தியளிக்கும் 'அருணாசலம்' என அகிலம் புகழும் திருவண்ணாமலை யென்னும் திவ்ய ஸ்தலத்தில் ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி வடிவாய் ஆத்ம நிஷ்டாபரராய் எழுந்தருளி யிருக்கும் பகவான் ஸ்ரீ ரமண மஹர்ஷிகள் தம் அபார கருணையால் இதுவரை உலகுக்கருளிய நூல்கள் பல. அவற்றுள், உலகிற் பெரிதுங் கொண்டாடப்படும் ஸ்ரீ பகவற் கீதையில் முமுக்ஷுக்களுக் குபயோகமாகத் தக்க சிறந்த சுலோகங்களைத் திரட்டி முறைப் படுத்தி, பக்தகோடிகள் பாராயணத்துக் கனுகுண மாக, அவர்கள் பிரார்த்தனைக் கிணங்க பகவானுற் செந்தமிழ்க் கலிவெண்பா வடிவில் மொழி பெயர்த் தருளப்பெற்ற இந்நூலில், ஞானபரமான கீதையின் முடிந்த நோக்கமான முக்கிய விஷயங்கள் யாவும் அடங்குவனவாம். சுருக்கமாகவும் தெளிவாகவும் விஷயங்களை விளக்குவதான இந்நூல் கற்போர்க் கெல்லாம் ஓர் அருள் நிதியாகும்.

ஸ்ரீ

பகவத்கீதாசாரக் கலிவெண்பா

பாயிரம்

தீர்த்தன் குருரமணன் சீர்ப்பகவற் கீதையிடைச்
சேர்த்தபொருள் வாய்ப்புடைய தேர்ந்தெடுத்துக்—கோத்துச்
சுருக்கமாத் தந்த சுலோகமா றேழு
மிருக்குமன மீசற் கிருப்பு.

நாற்பத் திரண்டுமொரு நற்கலிவெண் பாவாக்கி
யேற்பத் தமிழி லினிதிசைத்தான்—பாற்பயிலும்
பத்தரனு சந்தான பாரா யணமுறையில்
வைத்தவர்தா மோத மகிழ்ந்து.

ஸ்ரீ

பகவத்கீதாசாரக்

கலிவெண்பா

கருணை மிகுந்த கருத்தனுய்த் துக்கம்
பெருகி விழிநீர் பெருக—வருந்துமப்
பார்த்தன் றுயரகலப் பார்த்துமதி சூதனனிவ்
வார்த்தை யுரைத்தான் வகுத்துணரப்--பார்த்தனே
தேகமிது சேத்திரமாச் செப்பப் படுமிந்தத்
தேகத்தை யாவன் றெரிவனே—தேகியவன்
சேத்திரஞ்ஞ னென்று செப்புவார் தாமதனைப்
பார்த்தறிந் தோர்கள் பகுத்துணர்வாய்—காத்திரமாஞ்

சேத்திரங்கள் யாவுள்ளுஞ் சேர்ந்தே யிருக்கின்ற
சேத்திரஞ்ஞ னென்னைத் தேர்வாயே—சேத்திரஞ்
சேத்திரஞ்ஞன் றன்மை தெரிகின்ற ஞானமே
தோர்த்திடஃ தேயெனக் கொப்பொன்றுய்ச்—சேர்த்துணரு
மான்மாக்கள், யாவி னகத்து மமர்கின்ற
வான்மாயா னுவ னருச்சுன—வான்மாக்கட்
காதியொடு மத்தியமு மந்தமு மாமிவைக
ளாதியாம் யானே யறிமெய்யெப்—போதும்
பிறந்தா ரிறக்கப் பெறுத லுறுதி
யிறந்தார் பிறப்ப தெனலு—முறுதி
விலக்கற் கரிய விதியிதினீ வீணே
கலக்க முறலேன் கழறுய்—கலக்கும்
பிறப்பிறப்பில் லானென்றும் பின்னு மிவன்முன்
பிறந்து கழியப் பெறுனே—பிறவாதா
னென்றுமுளன் சாசுவத னிவ்வுடல்கொல் லப்படினுங்
கொன்றிடவொண் ணுனென்றுட் கொள்ளுக-வென்று

மிவன்றுணிக்க வொண்ணா னெரிக்கவொண் ணாதா
னிவனனைக்க வற்றவொண்ணா னேது—மிவனித்த
னெங்குமுளன் றானு மியல்பாற் சனாதனன்
றங்கு மசலனே தானான்மா—பங்கி
லெதனா னிறைவெய்து மேயுமிவை யாவு
மதழிவில் லாத தறிவா—யெதனானு
மாளாத வப்பொருளை மாளச் செயவல்ல
வாளாகா னாரு மறியுண்மை—கேளாய்நீ
யில்லா ததனுக் கிருப்பில்லை யுள்ளதனுக்
கில்லாமை யென்ப திலையெனவே—யில்லதுள
தென்னு மிரண்டி னியல்பிதுதாங் கண்டார்மெய்
தன்னை யறிந்த தவர்மெய்யின்—மன்னிடினு
மெங்குமெவற் றும்விண் ணிருந்தாலு நுண்மையினாற்
றங்குமவற் றிற்பற்றாத் தன்மைபோ—லெங்குமே
தேகத் திருந்தாலுந் தேகியா மான்மாவுந்
தேகத்தி லொட்டான் றெளியொளிவிண்—ணாகக்

கதிரோன் மதியுங் கனலுமெக் காலு
மதனை யொளிர்வித்த லாகா—தெதனை
யடைந்தே மடங்காரோ வஃதுபர மாமென்
னுடையவீ டாமெனவே யோர்வாய்—வடிவுற்
றுதியா தொழியாதென் றோதிடப் பட்ட
வதுமே னிலையென் றறைவ—ரதனை
மருவித் திரும்பாரோ மற்றஃதென் மேலா
மரியவீ டாகு மறிவாய்—கருவஞ்சேர்
மானமிலார் மோகமிலார் மாற்றினர் சார்பாசை
தானிலைத்தா ரெக்காலுந் தன்னிலே—யூனசுக
துக்கமெனுந் தொந்தந் தொலைந்தவரா ஞானியரவ்
வக்கரவீ டாளு மவராசை—மிக்க
வெவனூல் விதியை யிகந்திச்சை யேவு
மவவழி தன்னை யடுப்பா—னவனென்றுஞ்
சாரானே சித்தியொடு சாந்தி சுகத்தினையுஞ்
சேரானே முத்திச் சிறப்பதையு—நேராக

வெல்லா வுயிர்களிலொத் தேகனுய் நாசமுறு
மெல்லாவற் றும்பொன்ரு தேய்ந்தோனு—யெல்லோரும்
பார்ப்பதற் கொண்ணுப் பரமேச் சுரனையெவன்
பார்ப்பா னவனேபார்ப் பானயலார்—பார்ப்பாரோ
வன்னிய மெண்ணுத வன்பினு லென்னையெவ
ருன்னிடுவா ரன்னவர்க்கே யுத்தமனே—யென்னையிவ்
வாருக மெய்யா யறியத் தரிசிக்கப்
பேருக்கத் தக்கோன்யான் பின்பல—வாரு
மவரவர் தன்மைக் கடுத்த படியே
யெவர்க்குஞ் சிரத்தை யெழுங்காண்—புவியிற்
சிரத்தை யுருபுருடன் சேர்சிரத்தைக் கொத்தே
புருடனு மாதல் பொதுமெய்—தெரியச்
சிரத்தையுள் ளோனே திருத்திப் பொறியைக்
கருத்தில் விடாதே கருதி—மருவுவான்
மெய்யறிவு மேவிப்பின் மேலான சாந்தியினை
யெய்துவான் சின்னுளி லிங்கிந்த—மெய்யுற

வென்பாலே சித்த மிருத்தியெப் போதுமுள்
ளன்பாலே பத்திசெயு மன்பருக்—கென்னையவர்
சார்வா ரெதனலச் சற்புத்தி யோகத்தை
யீவேனு னென்னருளா லெண்ண தனைச்—சேர்வோரா
மன்னவ ருள்ளத் தமர்ந்தே யருளதனுற்
றுன்னுமறி யாமையாந் தொல்லிருளை—மின்னு
மறிவாம் விளக்கா லறவே யிறுதி
யுறச்செய்வேன் யானென் றுணர்வாய்—பெறுமவ்
வறிவா லெவர்த மகத்தறி யாமை
யறவே யழிந்த தவர்த—மறிவும்
பரிதியைப் போலப் பரத்தை யொளிரப்
புரிவித் திடுமப் பொழுதே—தெரியுலகின்
மேன்மை யுறப்பொறிகண் மேவும் பொறிகட்கு
மேன்மன மம்மனத்தின் மேன்மதி—தான்மதியின்
மேன்மையா யாவன் மிளிர்வா னவன்றன்னை
யான்மாவா மென்ன வறியுருவா—மான்மா

மதிக்குயர்வி் வாறு மதித்தே மனத்தை
மதியா னிறுவியான் மாவின்—மதிசேர்
விசயா செயிப்பாய் வெலற்கரிய காம
நிசசத் துருவுருவை நீயு—மிசைந்தே
யெரியு மெரியு மெரிகரும்பை யெல்லா
மெரித்துநீ றாக்க லெனவே—யெரியா
மறிவுங் கரும மனைத்து மெரித்தே
யுறுவிக்கு நீறா வுணர்மெய்—யறிவா
னெவனியக்க மெல்லாமு மிச்சையெண்ண மென்னு
மிவையில் லனவா வியங்கு—மவனே
யறிவெரியால் வெந்தவினை யானவனை யான்றோ
ரறிவொளிசேர் பண்டிதனென் றார்மெய்-யறிவுற்றே
யாசைசின மற்றா ரடங்கு மனமுற்றார்
தேசுறாஉ மான்மாவைத் தேரெதிகள்—பாசமில்
புத்த ரவருக்குப் பூரணநிர் வாணசுக
நித்தமனு பூதமா நேரதற்கா—வெத்தனித்துத்

தீரஞ்சேர் புத்தியினாற் சித்தத்தை மெல்லமெல்ல
நேரச் செயவேண்டு நிச்சலன—மாரதனே
சித்தத்தை யான்மாவிற் சேர்த்திடுக மற்றெதுவு
மித்தனையு மெண்ணிடா தேமந்தி—யொத்தே
யெதுவுந் திரமின்றி யென்றுமலை சித்த
மெதெதனைப் பற்றியே யேகு—மததினின்
றீர்த்தந்தச் சித்தத்தை யெப்போது மான்மாவிற்
சேர்த்துத் திரமுறவே செய்யிங்ஙன்—சேர்த்தே
யொடுக்கிப் பொறியை யுளத்தை மதியை
விடுத்தாசை யச்சம் வெறுப்பு—மடுத்தென்று
முத்தி தனக்கே முனையு முனிவனெவன்
முத்தனே யந்த முனிவரனு—நித்தஞ்
சகல வுயிர்களிற் றன்னையுந் தன்னிற்
சகல வுயிர்க டமையும்—விகலமறத்
தன்னினிலைத் தெங்குஞ் சமநோக்குள் ளான்காண்பன்
றன்னிய னந்தத் தவன்போல—மன்னினரா

யன்னிய சிந்தை யணுவுமிலா தென்னேயே
யுன்னியெவ ரென்று முபாசிப்பா—ரென்னிலே
யென்றுமொன்று மன்னவர்தம் யோகக்ஷேமங்களே
யென்றுந் தரித்திடுவேன் யான்றலேயா—லொன்று
மவர்களின் ஞானி யனனிய பக்த
னவன்விடா யோகியு மாவ—னவனே
பெரிய னவற்குப் பிரியன்யா னெற்குப்
பிரிய னவனும் பெரிதும்—பிரிவில்லா
னெண்ணில்சென் மங்க ளிறுதி யதின்ஞானி
யெண்ணி யகத்திலெனே யெப்போது—மெண்ணி
யெலாம்வாசு தேவனென வென்னுறுவான் மான்மா
வெலார்க்கு மரிய னிவனெண்—ணிலாதே
யகத்துள பற்றெல்லா மற்றுனெப் போதி
லுகப்புந் தனிற்றன்னு ளுற்றுன்—வகுத்தன
ரப்போ தவன்மெய் யறிஞனு ளுனென்று
மெப்போத முற்றுர் மிகத்தேர்ந்தே—யெப்போ

திகந்தவனு யிச்சையெலா மெய்தாத திற்பற்
றகன்றவனு மாயுள்ளா ஞர்தா—னகந்தை
மமதையு மில்லாவம் மாபுருட னென்று
மமைதி யுறுவா னறிவா—யமைந்த
வெவன்பா லுலகுபய மேது முறுதோ
வெவனுலகுக் கஞ்சானே வேது—மென்று
னுவப்புவர்ப்பு பீதி யுளக்கலக்க மற்றோ
னவனெனக்கு மீப்பிரிய ஞந்தே—ரெவனொருவன்
மானமவ மான மருவிற் சமனுகி
யேனையருற் றுர்களிலொப் பேய்ந்தோனுய்த்-தானே
தணந்தான் றனையகலாத் தன்முயற்சி யெல்லாங்
குணங்கள் கடந்தோனுக் கூறுய்—தணவா
தெவனுன்மா வின்க ணிரமிப்பான் மற்று
மெவனுன்மா விற்றிருத்தி யேய்ந்தா—னெவனுன்மா
வின்கண்ணே யின்புற் றிருப்பா னவன்றனக்
கென்றுமே செய்வதற்கொன் றின்றுமே—யன்றியவன்

பண்ணும் வினையாற் பயனேது மெய்தலிலை
பண்ணா ததனாலும் பாவமிலை—நண்ணியவற்
கெவ்வுயிர்க ளாலுந்தா னெய்திடத் தக்கதா
மெவ்வித மாம்பொருளு மின்றெங்கு—மெவ்விதத்து
முற்றதாம் பேற்றி லுவப்புற்றான் றொந்தங்க
ளிற்றா னழுக்கா றிலாதவ—னொற்றுமை
பெற்ற வவற்றுப் பெறாதவற்றுற் றான்செய்த
லுற்றாலும் பந்த முறானென்றும்—பற்றற்றே
யீச னுயிர்க ளெவற்றுள்ளுஞ் சேரிதயத்
தேசத்தி லென்றுந் திகழ்கின்றான்—பாசமா
மாயையா லெந்திரஞ்சேர் மன்னுயிர்கள் யாவினையு
மோயலற நின்றுழற்ற லுற்றுயிர்க—ணேய
னவனைச் சரண மடைகவெவ் வாற்று
மவனருளாற் சாந்தி யடைவா—யவனருளா
லீறில்லா வப்பதமு மெய்துவாய் பாரதனே
பேறிதனி லில்லை பிற.

வாழ்த்து

அருச்சுனற்குக் கீதை யருளினன் வாழி
விரிச்சுரைத்த நூலை மிகவே—சுருக்கியவிந்
நூல்வாழி வாழி நுவலடியர் சீரமணன்
ரூல்வாழி வாழியருட் டாள்.

திருவண்ணாமலை

ஸ்ரீ ரமணாச்ரம புஸ்தகாலயம்

மஹர்ஷிகளது பக்தர்கள் செய்தவை

	ரூ.	அ.	பை
ஸ்ரீ ரமண விஜயம் (ஜீவிய சரித்திரமும் உபதேச மொழிகளும்) ஸ்வாமி சுத்தானந்த பாரதியார் இயற்றியது இரண்டாம் பதிப்பு	2	0	0
ஸத்தர்சனம் (உள்ளது நாற்பதின் நாகர ஸ்லோகமும் பாஷ்யத் தமிழ் மொழி பெயர்ப்பும்)	0	6	0
உள்ளது நாற்பது (அநுபந்தத்துடன்) விரிவுரை	0	6	0
ஸ்ரீ ரமண சரித அகவல்	0	3	0
பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகள் சரித்திரமும் உபதேச மொழிகளும்	0	6	0
ஸ்ரீ ரமணஸ்துதி பஞ்சகம்	0	0	6
ஸ்ரீ ரமண அந்தாதி	0	1	0
ஸ்ரீ ரமணானந்த ஸ்தோத்திர பஞ்சகம்	0	1	0
ஸ்ரீ ரமண தோத்திரம்	0	0	6
ஸூதஸம்ஹிதா ஸாரம் (ஸதாசிவபிரம்மம் திரட்டிய கிரந்த மூலமும், தமிழ் வியாக்கியானமும்) முதற் பாகம்	0	4	0
பெரியார் வரலாறு (60 மஹான்களின் சரித்திர உபதேசங்கள் அடங்கியது)	2	0	0
ஷை மாணவர் பகுதி (ஆசிய விளக்குகள், கிரேக்கப் பெரியார் மாத்திரம்)	0	6	0
கிரேக்கப் பெரியார்	0	1	0
இந்திய ஸ்தல யாத்திரை மான்மியம் (தாஸ்ராவ் எழுதியது) இரண்டாம் பாகம்	0	10	0
ஸ்ரீ ரமண நாற்பது, நாகர ச்லோகத்துடன்	0	1	0
ஸ்ரீ ரமண மஹர்ஷி (112 படங்களுடன்)	0	8	0
ஸ்ரீ ரமண மஹர்ஷி (அவதார மஹிமை)	0	0	3

திருவண்ணாமலை
ஸ்ரீ ரமணாச்ரம புஸ்தகாலயம்

பகவான் ஸ்ரீ ரமணமஹர்ஷிகளருளியவை

	ரூ.	அ.	பை.
ஸ்ரீ அருணாசல ஸ்துதிபஞ்சகம்	0	2	0
உபதேசநூன்மாலை	0	2	0
அநுவாதநூன்மாலை (செய்யுள்)	0	2	0
அநுவாத நூன்மாலை (வசனம்) (விவேகசூடாமணி, திருக்குதிருசிய விவேகம் சேர்ந்தது) ...	0	6	0
விசார சங்கிரகம்	0	2	0
நான் யார்?	0	1	0
ஸ்ரீ ரமண கீதை (மொழிபெயர்ப்பு - மூலத்துடன்)	0	8	0
உபதேசவுந்தியாரும் கலிவெண்பாவும் ...	0	1	0
உபதேசஸாரம் (நாகரச்லோகமும் பாஷ்யத் தமிழ் மொழிபெயர்ப்பும்)	0	1	0
உபதேசமஞ்சரி	0	1	0

பகவான் மஹர்ஷிகளின் போட்டோக்கள்,
பிளாக் படங்கள் கிடைக்கும்.